புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஆகஸ்டு 31, 2023 • புரட்சி 23 • முழக்கம் 33 • விலை ரூ.3.00

## சென்னை, கோவை, ஈரோடு மாவட்டங்களில் தொடர் கூட்டங்கள்

# திண்டுக்கல் 40 கூட்டங்களை நிறைவு செய்தது

**சென்னை :** சென்னை மாவட்டக் கழகத்தின் சார்பாக 21.08.2023 திங்கள் மாலை 5 மணிக்கு கோடம்பாக்கம் மார்கெட் அருகிலும், மாலை 7 மணிக்கு தர்மாபுரம் மாரியம்மன் கோவில் அருகிலும், 23.08.2023 செவ்வாய் மாலை 5 மணிக்கு, மடுவாங்கரை புதியத் தெருவிலும் இரவு 7:30 மணிக்கு, பழைய பூந்தமல்லி சாலை, கங்கை அம்மன் கோவில் அருகிலும், 23.08.2023 புதன்கிழமை மாலை 5 மணிக்கு ஜாபர்கான்பேட்டை, கங்கையம்மன் கோயில் அருகிலும், மாலை 7 மணி ஜோன்ஸ் சாலை சாரதி நகர் சந்திப்பிலும், 24.08.2023 வியாழன் அன்று மாலை 5.30 மணிக்கு ஜோன்ஸ் சாலை கூத்தாடும் பிள்ளையார் கோயில் தெருவிலும், மாலை 7.30 மணிக்கு சைதாப்பேட்டை, குயவர் வீதியிலும், 25/08/2023 வெள்ளிக்கிழமை அன்று மாலை 5.30 மணிக்கு சைதாப்பேட்டை கலைஞர் பொன்விழா வளைவு அருகிலும், மாலை 7.30 மணிக்கு அரங்கநாதன் சுரங்கப்பாதை அருகிலும், 26.08.2023 சனிக்கிழமை அன்று மாலை 6 மணிக்கு தேனாம்பேட்டை திருவள்ளுவர் சாலையிலும், இரவு 8 மணிக்கு தேனாம்பேட்டை திரு.வி.க நகர் குடியிருப்பிலும் நடைப்பெற்றது.

கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், வழக்கறிஞர் இரமேசு பெரியார், திமுக 113 (அ) வட்டச் செயலாளர் தேவராஜ், அர்ச்சகர் மாணவர் சங்கத் தலைவர் வா.ரங்கநாதன், எட்வின் பிரபாகரன், அன்னூர் விஷ்ணு, தேன்மொழி ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.

தொடர்ந்து நாத்திகன் - உமாபதி குழுவின் நையாண்டி அரசியல் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

இதுவரை சென்னை மாவட்டக் கழகம் 72 தெருமுனைக் கூட்டங்கள் நிறைவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**கோவை :** கோவை மாவட்டக் கழகத்தின் சார்பாக 14வது தெருமுனைக் கூட்டம் காந்திபுரம் டாடாபாத், ஜீவா மன்றம் அருகில் மாநகரச் செயலாளர் வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் கட்சி கோவை மாநகர மாவட்ட செயலாளர் குரு தொடங்கி வைத்தார். மாநகர அமைப்பாளர் மாதவன் வரவேற்புரையாற்றினார்.

மாநகர அமைப்பாளர் கிருஷ்ணன், மாவட்ட அமைப்பாளர் புரட்சித் தமிழன் சனாதன எதிர்ப்பு பாடல்களைப் பாடினர். மாநகர தலைவர் நிர்மல்குமார் - சூலூர் தமிழ்ச்செல்வி கேள்வி-பதில் நிகழ்ச்சி நிகழ்த்தினர்.

கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தமிழ்ப்புலிகள் கட்சி பொதுச்செயலாளர் இளவேனில், இந்திய கம்யூனிஸ்டு கட்சி மத்திய மண்டல துணைச் செயலாளர் மணிபாரதி, தமிழ்நாடு மாணவர் கழக திருப்பூர் மகிழவன், ஜீவா மன்ற பொறுப்பாளர் சாந்தகுமார் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். கணபதி பகுதி கழகப் பொறுப்பாளர் இரத்தினபுரி சதீசு நன்றி கூறினார்.

**ஈரோடு வடக்கு :** ஈரோடு வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக தெருமுனைக் கூட்டம் 20.08.2023 அன்று பெருந்துறை பேருந்து நிலையம் பகுதியில் நடைபெற்றது.

கூட்ட தொடக்கமாக பெரியார் விழுது அறிவுக்கனல் பெரியாரிய பாடல்களைப் பாடினார்.

அதனைத் தொடர்ந்து மாநில வெளியீட்டு செயலாளர் இராம. இளங்கோவன், நிவாஸ், கூதாம்பி மூர்த்தி, செந்தில் ஆகியோர் பயண நோக்கத்தினை விளக்கி உரையாற்றினார்கள்.

மாவட்ட செயலாளர் செல்வக்குமார் நன்றி கூறினார்.

கூட்டம் நடைபெற்ற பகுதியில் கோட்டை மாரியம்மன் கோயில் திருவிழா நடந்து கொண்டிருந்தது. தோழர்கள் தெருமுனைக் கூட்டம் நிறைவு பெறும் வரை ஒலி பெருக்கியை நிறுத்தி வைக்க கோரிக்கை வைத்தனர். கோயில் கமிட்டியினரும் தோழர்களின் கோரிக்கையை ஏற்று கூட்டம் நிறைவு பெறும் வரை ஒலி பெருக்கியை நிறுத்தி வைத்து ஒத்துழைப்பு வழங்கியது தோழர்கள் மத்தியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

பெருந்துறை சின்னசாமி அனைவருக்கும் தேனீர் ஏற்பாடு செய்தார்.

கழக வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன், எலத்தூர் செல்வக்குமார், நிவாஸ், ரமேசு, அருளானந்தம், மயில்சாமி, பவானி வினோத், சின்னசாமி, இராவணன், சிவராஜ், கூதாம்பி மூர்த்தி, செந்தில், தனுக்கோடி, கூதாம்பி துரை,வினோத், யாழ் திலிபன், அறிவுக்கனல், மெக்காலே ஆகியோர் கலந்து கொண்டனர்.

**திண்டுக்கல் :** திண்டுக்கல் மாவட்ட கழகத்தின் சார்பாக ஒட்டன்சத்திரத்தில் தெருமுனைக் கூட்டத்தை 22.08.2023 அன்று ஒட்டன்சத்திரம் நகர்மன்றத் தலைவர் திருமலைச்சாமி தொடங்கி வைத்தார்.

தும்பச்சம்பட்டி, பெரிய கோட்டை, சத்திரபட்டி, விருப்பாச்சி, தங்கச்சியம்மாபட்டி, அம்பிளிக்கை, சிந்தலம்பட்டி, சக்கம்பட்டி, ஒடைப்பட்டி, இ.வாடிப்பட்டி, கொ.கீரனூர், சின்னக்காம்பட்டி, மார்க்கம்பட்டி,இடையகோட்டை,இடையகோட்டை பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் 26.8.2023 வரை தொடர்ந்து 5 நாட்கள் நடைபெற்றது.

மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மாக்சிம் கார்க்கி, மாவட்ட இணையதளப் பொறுப்பாளர் ராஜா, மாவட்ட அமைப்பாளர் மருதமூர்த்தி ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.

மீனா, ராஜா, பெரியார் ஆகியோர் தெருமுனைக் கூட்டத்தினை விளக்கி பாடல்களைப் பாடினார்கள்.

தமிழ்நாடு மாணவர் கழக பொறுப்பாளர் ஆயுதன் நன்றி கூறினார்.

இதுவரை திண்டுக்கல் மாவட்டக் கழகம் 40 தெருமுனைக் கூட்டங்களை நிறைவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**சேலம் :** 21.08.23 திங்கள் மாலை 7.00 மணியளவில் காவலாண்டியூர் கிளைக் கழக சார்பில் 15வது தெருமுனை பரப்புரைக் கூட்டம் ஈரோடு வடக்கு மாவட்டம் ரெட்டிபாளையம், நேருநகர் பகுதியில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு செட்டியூர் மாரி வரவேற்புரை யாற்றினார்.

ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர் நாத்திகசோதி தலைமையில், சமூக ஆர்வலர்களான மாதன், சேகர், கண்ணுசாமி, கண்ணுப்பையன் ஆகியோர் முன்னிலையில் கூட்டம் துவங்கியது.

காவை.இளவரசனின் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சியைத் தொடர்ந்து வழக்கறிஞர் திருநீலகண்டன் CPM, சமூக ஆர்வலர்கள் தைரியமணி, சிவானந்தம், கழக தலைமைக்குழு உறுப்பினர் காவை.ஈசுவரன், வி.சி.க. கொளத்தூர் ஒன்றியச் செயலாளர் சேட்டுக்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இறுதியாக சித்துசாமி நன்றி கூறினார்.

கூட்டத்தில் ஊர்பொதுமக்கள், கழகத் தோழர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## கலவரத்தைத் தூண்டும் இந்து முன்னணியினர் மீது நடவடிக்கை கோரி

# நங்கவள்ளியில் ஆர்ப்பாட்டம்

*நங்கவள்ளி கிளைக் கழக சார்பில் எது சனாதனம்? எது திராவிடம்? தெருமுனைக் கூட்டம் 26.07.2023 அன்று மாலை 5 மணியளவில் தானாபதியூர் பகுதியில் காவல் துறை அனுமதியுடன் நடைபெற்ற போது, திட்டமிட்டு தெருமுனைக் கூட்டத்தை தடுத்து நிறுத்தி கலவரத்தை தூண்டும் விதமாக செயல்பட்ட இந்து முன்னணியினர் மீது கழக தோழர்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து ஒரு மாத காலம் ஆகியும், வழக்கு பதிவு செய்யாத நங்கவள்ளி காவல் துறையை கண்டித்து. 24.08.2023 (வியாழன்) மாலை 4 மணிக்கு நங்கவள்ளி பேருந்து நிலையத்தில் சேலம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*



*ஆர்ப்பாட்டத்திற்கு சேலம் மேற்கு மாவட்ட தலைவர் சூர்யகுமார், நங்கவள்ளி ஒன்றிய பொறுப்பாளர் கிருஷ்ணன், நங்கவள்ளி ஒன்றிய பொறுப்பாளர் இராஜேந்திரன், சேலம் கிழக்கு மாவட்ட இளைஞரணி தலைவர் தங்கதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*சேலம் மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி சீ.அன்பு, கழக தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன், கழக தலைமைக் குழு உறுப்பினர் RS சக்திவேல், வனவாசி நகர செயலாளர் உமாசங்கர் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.*

*இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார்.*

*இந்த ஆர்ப்பாட்டத்தில் நங்கவள்ளி, வனவாசி, மேட்டூர், மேட்டூர் RS, கொளத்தூர், காவலாண்டியூர், இளம்பிள்ளை, ஏற்காடு, கருப்பூர், கே.ஆர்.தோப்பூர், குரங்குசாவடி, மூலப்பாதை, சேலம் மாநகரம், ஆத்தூர் ஆகிய பல்வேறு பகுதிகளில் இருந்து கழக தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.*

### தலையங்கம்

# சிவனின் சக்தியா? அறிவியலின் வளர்ச்சியா?

சந்திராயன் நிலவில் இறங்கிய இடத்திற்கு சிவசக்தி என்று பெயர் சூட்டியுள்ளார் மோடி. சிவசக்திக்கும் இந்த சந்திராயன் அறிவியலுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது?. சந்திராயன் என்ற அறிவியலை உருவாக்கி அதற்காக உழைத்து சாதனை படைத்த விஞ்ஞானிகள் இப்படி சிவசக்தி என்று பெயர் சூட்டியதை ஏற்றுக் கொள்கிறார்களா என்ற ஒரு கேள்வி அடிப்படையில் இருக்கிறது.

மத நம்பிக்கையற்றவர்கள், பிற மதத்தவர் என பலரும் இந்த விஞ்ஞானிகள் குழுவில் பணியாற்றி உள்ளனர். நிலவில் சந்திராயன் இறங்கிய இடத்திற்கு ஏதோ நிலவில் உள்ள தாசில்தார் அலுவலகம் மோடியின் ஆட்சிக்கு அந்த இடத்தை பட்டா போட்டு கொடுத்துவிட்டதை போல சொந்தம் கொண்டாடி அதற்கு பெயர் சுட்டுவது என்ற எல்லைக்கு போய்விட்டார்.

அறிவியலும் மூடநம்பிக்கையும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை. மூட நம்பிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் இன்றைக்கு அறிவியல் விடை கண்டு வருகிறது. பிரபஞ்சத்தில் பல புதிர்கள் கண்டுபிடிக்கப்படாத போது, கடவுள்களால் உருவாக்கப்பட்டவை என்று சொல்லப்பட்டவை அனைத்திற்கும் இன்றைக்கு அறிவியல் அதற்கான விடைகளை தந்து சாதனைப் படைத்துவருகிறது. இந்திய அரசியல் சட்டம் ஒரு குடிமகனின் கடமை என்பதாக அறிவியல் மனப்பான்மையை வளர்க்க வேண்டும் என்று கூறுகிறது. இதைப்பற்றி எல்லாம் மோடிக்கு கவலை இல்லை. சந்திர கிரகணம் என்று வந்துவிட்டால் அதனுடைய அறிவியல் அடிப்படைகளை மறுத்துவிட்டு சந்திரனை பாம்பு விழுங்கிக் கொண்டிருக்கிறது, அதனால் தான் இருளடைந்து விட்டது என்று கூறி சந்திர கிரகணம் முடிவடைகின்ற வரை அதற்காக காத்திருந்து, முடிந்த பிறகு தீட்டு கழிப்பதற்கு புனித நீராடுகிற பழக்கம் இன்றைக்கும் ஒரு மூடநம்பிக்கையாக மக்கள் மத்தியில் பரப்பப்பட்டு வருகிறது.

பெண்களை கவர்ந்துவிடலாம் என்ற நோக்கத்தில், மூன்று பெண் விஞ்ஞானிகளின் சக்தியில் இந்த சாதனை நிகழ்ந்திருக்கிறது என்றும், நமது பாரதப் பெண்கள் விண்வெளிக்கே சவால் விடுகிறார்கள் என்றும் புகழாரம் சூட்டுகிறார் மோடி.

பெண்கள் விண்வெளிக்கு சவால் விட்டாலும் சபரிமலை கோயிலுக்குள் நீதிமன்றமே கூறினாலும் அனுமதிக்க முடியாது என்று கூறுவது தான் இவரது பாஜக. குடியரசு தலைவராக ஒரு பழங்குடி இனத்தைச் சார்ந்த பெண்ணை நியமித்து விட்டோம் என்று கூறுகிற இதே மோடி, புதிய நாடாளுமன்றக் கட்டிட திறப்பு விழாவுக்கு அழைக்காமல் அவமானப்படுத்தியவர் தான். அங்கே நடக்கும் வேத பார்ப்பனிய சடங்குகளில் ஒரு பெண் அதுவும் பழங்குடியினப் பெண் பங்கேற்க அவர்கள் பேசும் சனாதனம் அனுமதிக்கவில்லை. ராஷ்ட்ரிய சுயம் சேவக்காக ஒரு பெண் அனுமத்திக்கபடுவது இல்லை. இன்றுவரை ஆர்.எஸ். எஸ் பேரணியில் சீருடையுடன் ஒரு பெண்ணையும் பார்க்க முடியவில்லை. பல்லாயிரம் கோடி பணத்தில் இவர்கள் கட்டிவரும் ராமன் கோயிலில் பெண்களை அர்ச்சகர்களாக நியமிப்பார்களாக? இவர்தான் பாரதப் பெண்களின் சக்தியைப் பேசுகிறார்.

சிவபெருமான் தலையிலேயே நிலவு இருக்கிறது. அதன் காரணமாக நிலவுக்கு சிவசக்தி என்று பெயர் சூட்டிவிட்டார் போலும். நாளைக்கு நிலவிலேயே ராமன் கோயில் கட்டப்போகிறோம், நிலவிலே ஒரு இராமராஜ்ஜியத்தை உருவாக்கப் போகிறோம் இது இந்துக்களுக்கு சொந்தமானது என்று, எப்படி இந்தியாவை பாரதமாக மாற்றிக் கொண்டிருக்கிறார்களோ, இந்திய அரசியலமைப்பு குற்றச் சட்டப்பிரிவுகளுக்கு பாரதம் என்று பெயர் சூட்டிக் கொண்டிருக்கிறார்களோ அதுபோல நிலவுக்கும் மதச்சாயம் பூசினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

ஒரு பிரதமர் இப்படி தரம் தாழ்ந்த வேலையில் ஈடுபடுகிறார் என்பதை உலக நாடுகள் கைகொட்டி சிரிக்கும். அறிவியலுக்கு எதிரான மோடியின் இந்த நடவடிக்கை வன்மையாக கண்டிக்கத்தக்கது.

# 200 வயதில் மோடி ஆட்சியில் அறுவை சிகிச்சை செய்து காப்பீடு பெற்றவர்கள்

**மோடி ஆட்சியில் மருத்துவ காப்பீடு திட்டத்தில் மெகா ஊழல்கள் நடந்துள்ளது.**

*தணிக்கை ஆணையம் வெளியிட்டுள்ள இன்னொரு முக்கியமான ஆய்வறிக்கை பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜ்னா (ABPM-JAY எனப்படும் மருத்துவ சிகிச்சை திட்டம் குறித்ததாகும்.*

*இந்த திட்டத்துக்கு அடிப்படை Socio Economic Caste Census எனப்படும் சமூக பொருளாதார சாதிய மக்கள் தொகை கணக் கெடுப்பு என ஒன்றிய அரசு கூறுகிறது. ஆனால் இந்த அடிப்படையே பல குறைபாடுகளை கொண்டுள்ளது என்பது தணிக்கை ஆணையத்தின் கருத்து.*

*இந்த திட்டத்துக்கு பல்வேறு தகவல் தொழில்நுட்பத்தையும் தரவுகள் சேகரித் தலுக்கான மென் பொருளையும் ஒன்றிய அரசு தான் உருவாக்கியது. இதில் பல கோளாறுகளும் குறைகளும் உள்ளன. இதன் விளைவாக பல முறைகேடுகள் நடக்க வாய்ப்பு உள்ளது. அவ்வாறு நடந்தவற்றை தணிக்கை ஆணையம் பட்டியலிடுகிறது. அவற்றில் சில:*

*சிகிச்சை பெற தகுதிகள் இருந்தும் நிராகரிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை சுமார் 60 லட்சம். தகுதிகள் இல்லாமலேயே சிகிச்சை பெற்றவர்கள் எண்ணிக்கை சுமார் 1.93 கோடி. இந்த திட்டத்தின் கீழ் 10.74 கோடி குடும்பங்கள் பயன்பெறும் என அறிவிக்கப் பட்டது. ஆனால் இதுவரை 4.70 கோடி குடும்பங்கள்தான் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதில் 1.89 முதல் 2.08 கோடி குடும்பங்கள் மட்டுமே தகுதி படைத்ததாக தீர்மானிக்கப் பட்டுள்ளன. தகுதி படைத்த அனைத்து குடும்பங்களையும் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவர தணிக்கை ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.*

*200 வயதுக்கும் மேற்பட்டோர் 22.78 லட்சம் விண்ணப்பதாரர்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. சிலரின் பிறந்த வருடம் 1814/1821/1841 என குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால் அவர்கள் வயது 200க்கும் மேல்! இத்திட்டத்தின் கீழ் தகுதி உள்ளவர்களுக்கு 9 இலக்க தனித்துவ அடையாள எண் தரப்படுகிறது. இது வாழ்நாள் முழுவதும் பொருந்தக்கூடியது. ஆனால் ஆணையத்தின் மாதிரி ஆய்வில் ஒரே எண் இருவர் அல்லது மூவர் அல்லது நான்கு பேருக்கு கூட தரப்பட்டுள்ளது. அப்படி 1.57 லட்சம் எண்கள் தவறாக தரப்பட்டுள்ளன.*

### *ஒரே குடும்பத்தில் 100 முதல் 200 பேர்*

*தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளில் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை 11 முதல் 50 என 43180, 50 முதல் 100 குடும்ப உறுப்பி னர்கள் என 12,100 முதல் 200 வரை என 4 பயனாளிகளுக்கு குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் முறைகேடுகள் நடந்திருந்தால் ஆச்சர்யம் இல்லை. 000000000000 எனும் ஆதார் எண் கீழ் 1285 பெயர்கள் இணைக்கப்பட்டுள்ளன. அதே போல 784545 என தொடங்கும் ஒரே ஆதாரின் கீழ் 1245 பெயர்களும் 21547 என தொடங்கும் ஒரே ஆதாரின் கீழ் 975 பெயர்களும் இணைக்கப்பட்டுள்ளன. இப்படி 5 ஆதார் எண் கீழ் 4761 பெயர்கள் இணைக்கப்பட்டுள்ளன.*

*இறந்தவர்களுக்கு காப்பீடு வழங்கப் பட்டுள்ளது. குணமாகி சென்றவர்களுக்கு அறுவைச் சிகிச்சை நடந்துள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*1081 நிராகரிக்கப்பட்ட பயனாளிகளின் அட்டைகள் மூலம் ரூ.71.47 லட்சமும் முடக்கப்பட்ட 590 அட்டைகள் மூலம் 55.31 லட்சமும் பெறப்பட்டுள்ளது. தகுதி நீக்கம் செய்யப்பட்ட மருத்துவ மனைகள் அதற்கு பின்னரும் சிகிச்சை அளித்து ரூ.1.46 கோடி பெற்றுள்ளன. ஒரே நோயாளி ஒரே சமயத்தில் பல மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றதாக கணக்கு காட்டி பணம் பெறப்பட்டுள்ளது. இவ்வாறு 2231 மருத்துவமனைகள் முறைகேடு செய்துள்ளன. காப்பீடு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூ.458.19 கோடி திரும்பப் பெறவில்லை. மேற்கண்ட குறைகளை ஒன்றிய அரசு உருவாக்கிய மென்பொருள் கண்டுபிடிக்கவோ அல்லது தடுக்கவோ இயலவில்லை.*

# கோவையில் ஆளுநருக்கு எதிராக கழகம் ஆர்ப்பாட்டம்



கோவை : பாரதியார் பல்கலைக் கழகத்திற்கு பட்டமளிப்பு விழாவிற்கு கலந்து கொள்ள வருகை தந்த ஆளுநர் ஆர்.என்.ரவியை கண்டித்து கழகப் பொருளாளர் திருப்பூர் சு.துரைசாமி தலைமையில் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கழக வெளியீட்டுச் செயலாளர் இராம இளங்கோவன், கோவை மாவட்ட தலைவர் இராமச்சந்திரன், திருப்பூர் மாவட்ட தலைவர் முகில்ராசு திண்டுக்கல் மாவட்ட தலைவர் மருதமூர்த்தி, திராவிடத் தமிழர் விடுதலை இயக்க நந்தன் தம்பி உட்பட 37 தோழர்கள் கைதாகினர். கைதான தோழர்கள் மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட உக்கடம் கண்ணன், கல்லூரி மாணவர் தொண்டாமுத்தூர் நவீன் ஆகியோர் கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

## சி.ஏ.ஜி அறிக்கை அம்பலப்படுத்துகிறது

# பாஜகவுக்கு 77 கோடி நன்கொடை தந்ததற்காக விதிகளை மீறி டெண்டர்

*மத்திய தணிக்கைத்துறை - ஒன்றிய ஆட்சி கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனம். அந்த நிறுவனமே இப்போது மோடி ஆட்சியின் ஊழல் முறைகேடுகளை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்திவருகிறது.*

- *பாஜவுக்கு நிதி தந்தவர்களுக்கும் விதிகளை மீறி திட்ட அனுமதி*

- *சமர்ப்பித்த ஆவணங்கள் தவறாக இருந்தும் அனுமதி வழங்கப்பட்ட அவலம்*

- *உச்சநீதிமன்ற நீதிபதிகள் தாமாக முன்வந்து விசாரிக்கக்கூடிய அடுத்த ஊழல் அம்பலம்*

பிரதமரின் நெருக்கம் இருந்தால் போதும் கனவிலும் நினைக்காத திட்டங்களும் கிடைக்கும் என்பது ஒன்றிய பாஜ அரசின் சித்தாந்தமாக மாறிவிட்டதோ என்று ஐயப்படுகின்ற அளவுக்கு அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கிறார் அதானி. நாட்டின் எல்லைப் பகுதிகள், கடலோரப் பகுதிகள், துறைமுகங்கள், சுற்றுலா தலங்கள், 100 மாவட்ட தலைமையகங்கள் ஆகியவற்றை இணைக்கும் 34,800 கிமீ நீள சாலை அமைப்பது தான் பாரத் மாலா திட்டத்தின் நோக்கமாகும். நாட்டின் மிகப்பெரிய நெடுஞ்சாலைத் திட்டங்களில் ஒன்று என்பதால் தகுதி வாய்ந்த, முன் அனுபவம் பெற்ற நிறுவனங்களுக்குதான் இந்த திட்டம் வழங்கப்பட வேண்டும் என்பது காலம் காலமாக இருந்து வந்த நடைமுறை. ஆனால், பாரத் மாலா திட்டப் பணிகள் ஒப்படைக்கப்பட்டது தொடர்பாக சிஏஜி வெளியிட்ட அறிக்கை, முறைகேடுகள், விதி மீறல்களின் உச்சத்தை பிரதிபலிப்பதாகவும், கடும் அதிர்ச்சியை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. காரணம், அனுபவமும், தகுதியும் இல்லாத போதும் அதானி நிறுவனங்களுக்கும் பாஜவுக்கு தாராள கட்சி நிதி வழங்கிய மற்றும் பாஜ தலைவர்களின் நிறுவனங்களுக்கும் விதிகளை மீறி திட்டங்கள் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன.

உதாரணமாக, அதானி டிரான்ஸ்போர்ட் தலைமையிலான நிறுவனங்களின் கூட்டமைப்பில் உள்ள சூர்யபேட் கம்மம் ரோடு பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு தெலங்கானாவில் உள்ள சூர்யபேட் மற்றும் கம்மம் இடையிலான நான்கு வழி தேசிய நெடுஞ்சாலை திட்டம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த நிறுவனத்திற்கு நெடுஞ்சாலை அமைக்கும் பணியில் கொஞ்சம் கூட முன் அனுபவம் இல்லை. இதேபோன்று தான், பிஎன்ஆர் இன்போடெக் என்ற உள்கட்டமைப்பு நிறுவனத்திற்கு லக்னோ வட்டச்சாலை (ரிங் ரோடு) திட்டப் பணியின் ஒரு பகுதி 2019ம் ஆண்டு ஆகஸ்ட்டில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்கான மதிப்பீட்டு செலவு, நிர்ணயித்திருந்ததை விட 17.44 சதவீதம் அதிகம். இது மட்டுமின்றி மறுமதிப்பீட்டிலும் திட்டச் செலவு 2.02 சதவீதம் அதிகரித்துவிட்டது. இந்த நிறுவனம் பாஜ தலைவர் நவீன் ஜெயின் என்பவருக்குச் சொந்தமானது. திட்டப்பணி ஒப்படைக்கப்பட்ட போது ஆக்ரா மேயராக இருந்தவர் தான் நவீன் ஜெயின். இதேபோன்று, ஐஆர்பி இன்ஃப்ரா ஸ்டிரக்சர் டெவலப்பர்ஸ், ஜெ குமார் இன்ஃப்ரா ப்ராஜெக்ட்ஸ், லார்சன் அண்ட் டுப்ரோ மற்றும் எம்கேசி இன்ப்ரா ஸ்டிரக்சர் லிமிடெட் ஆகிய நிறுவனங்களுக்கும் பாரத் மாலா திட்டப்பணிகள் ஒப்படைக்கப்பட்டதில் விதிகள் மீறப்பட்டு முறைகேடு நடந்துள்ளதாக சிஏஜி அறிக்கை சுட்டிக்காட்டி உள்ளது. இவ்வாறு விதிகளை மீறி திட்டப் பணிகளை ஒப்படைத்ததற்கு காரணம், இந்த 4 நிறுவனங்களும் கடந்த 2013ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரை பாஜவுக்கு கட்சி நிதியாக ரூ.77 கோடி கொடுத்திருக்கின்றன என்று குற்றம் சாட்டப்படுகிறது.

**• அதானி தலைமையில் இணைந்த நிறுவனங்கள்**

திட்டப் பணிகளுக்கு விண்ணப்பித்த நிறுவனங்களின் கூட்டமைப்பில் அதானி நிறுவனம் வைத்துள்ள பங்கு 74 சதவீதம். இவ்வாறு நெடுஞ்சாலைத்துறை பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் அந்தத் துறையில் குறைந்த பட்சம் 6 ஆண்டுகளாவது அனுபவம் பெற்றிருக்க வேண்டும் என்பது விதி. ஆனால் இந்த அடிப்படை விதியை கூட பூர்த்தி செய்யாத, நேரடியாகவோ மறைமுகமாகவோ கூட சாலை பணிகளில் ஈடுபட்டிராத அதானி நிறுவனம் தான் திட்டத்தை மேற்கொள்ள ஒப்பந்தம் பெற்றுள்ள நிறுவனங்களின் கூட்டமைப்பிற்கு தலைமை ஏற்றுள்ளது.

அதாவது அதானி நிறுவனத்துக்கு சாலை பணிகளில் அனுபவம் இல்லாதபோதும், பிறதுறை நிறுவனங்களுடன் இணைத்து சம்பந்தப்பட்ட துறை அனுபவங்களை தனதாக்கி எந்த வகையிலாவது சம்பந்தம் இல்லாத திட்டங்களை கூட டெண்டர் எடுத்து விடுகிறது.இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (என்எச்ஏஐ) திட்டத்தின் மொத்த செலவினத்தில் 40 சதவீத பங்களிப்பை வழங்கும். எஞ்சிய 60 சதவீதம் சாலை மேம்பாட்டு திட்டப் பணியில் ஈடுபடும் நிறுவனம் ஏற்க வேண்டும். இந்த 60 சதவீதத்தில் 20 முதல் 25 சதவீத தொகையை தன்னிடம் இருந்த நிதியிலிருந்து எடுத்துக்கொண்டு எஞ்சிய தொகையை வங்கிகளில் கடனாக பெறுவது வழக்கம்.

**• குறைந்த பிரீமியம் குறிப்பிட்டும் கைமாறிய டெண்டர்**

லக்னோ வட்டச்சாலை (ரிங் ரோடு) திட்டப் பணியின் ஒரு பகுதி பணிக்கு கடந்த 2019 மார்ச் 7ம் தேதி டெண்டர் வெளியிடப்பட்டிருந்தது. திட்ட மதிப்பீடாக ரூ.904.31 கோடி நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதைவிட அதிகமாக ரூ.1,062 கோடி மதிப்புக்கு பிஎன்சி இன்போடெக் நிறுவனத்திற்கு திட்டப் பணி வழங்கப்பட்டுள்ளது. இது முதலில் நிர்ணயித்த தொகையை விட 17.44 சதவீதம் அதிகமாகும். இந்த ஐஆர்பி இன்ஃப்ரா ஸ்டிரக்சர் நிறுவனம் பாஜவுக்கு கட்சி நிதியாக கடந்த 2013ம் ஆண்டு முதல் இதுவரை ரூ.65 கோடி வழங்கியுள்ளது. இந்த நிறுவனம் ஹாப்பூர் பைபாஸ் – மொராதாபாத் நெடுஞ்சாலை திட்டப் பணியை ஏற்றுள்ளது.

அதுவும் 68 சதவீதம் குறைந்த பிரீமியத்துக்கு எடுத்துள்ளது. அதாவது, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் இந்தத் திட்டத்திற்கு டெண்டர் வெளியிடும்போது, சாலை திட்டத்தை முடித்த பிறகு அரசுக்கு இந்த நிறுவனம் ஆண்டு பிரீமியமாக ரூ.97.99 கோடி செலுத்த வேண்டும். பின்னர், 22 ஆண்டுகளுக்கு சுங்க கட்டணமாக வசூலித்துக் கொள்ளலாம். ஆனால், 2018ம் ஆண்டில், இந்த நிறுவனம் சமர்ப்பித்த டெண்டரில் ஆண்டு பிரீமியமாக ரூ.31.5 கோடி மட்டுமே வழங்குவதாக குறிப்பிட்டிருந்தும், நெடுஞ்சாலை ஆணையம் அதனை ஏற்றுக் கொண்டுள்ளது. திட்டப்பணி நடைபெற உள்ள சாலையில் செல்வதாக உத்தேசிக்கப்படும் வாகன போக்குவரத்து மற்றும் விரிவான திட்ட அறிக்கையின்படி உள்ள மொத்த விலை புள்ளி அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தேசிய நெடுஞ்சாலை ஆணையம் விளக்கம் அளித்துள்ளது.

அதேநேரத்தில், ஐஆர்பி நிறுவன இணையதளத்தில் மேற்கண்ட திட்டத்தின் மதிப்பு சுமார் ரூ.3,345 கோடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. திட்ட தேதியிலிருந்து ஒரு வாரத்துக்குள்ளாகவே இந்த முடிவுக்கு தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வந்துள்ளது. திட்ட மதிப்பீட்டில் தவறுகள் இருந்து போதிலும் எந்த ஒரு நியாயமான காரணமோ அல்லது மறு டெண்டர் விடுவதற்கான முயற்சியிலோ ஈடுபடாமல் அவசரகதியில் இப்படி ஒரு முடிவு எடுக்கப்பட்டது குறித்து சிஏஜி அறிக்கையில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

ஆனால் திட்டத்தை வடிவமைத்து அதனை கட்டி முடித்து இயக்குவது மற்றும் ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்பட்ட கால அளவு வரை சோதனை சாவடி மூலம் வருவாய் ஈட்டிக் கொள்வது பின்னர் அரசிடம் திட்டத்தை ஒப்படைப்பது என்ற அடிப்படையில் தான் மேற்கண்ட திட்டம் டெண்டர் விடப்பட்டுள்ளது. ஐஆர்பி இன்ப்ரா ஸ்டிரக்சர் நிறுவனம் கடந்த 2020-21 நிதியாண்டில் பாஜவுக்கு ரூ.20 கோடியும் இதனுடன் தொடர்புடைய 3 நிறுவனங்கள் கடந்த 2013ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரை ரூ.45 கோடியும் கட்சி நிதியாக வழங்கியிருக்கின்றன. கட்சி நிதியும். அதானியுடன் கூட்டும் தகுதியாகுமா? கடந்த 2018 டிசம்பர் மாதம் ஜெ குமார் இன்ப்ரா ப்ராஜெக்ட் நிறுவனம் துவாரகா எக்ஸ்பிரஸ் சாலை திட்டத்தின் ஒரு பகுதியை ரூ.1,349 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தம் எடுத்திருந்தது.

இந்தத் திட்டப் பணியை கைக்கொள்வதற்கு விண்ணப்பிக்கும் நிறுவனம் சுரங்கப்பாதை அமைப்பதில் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். ஆனால், அடிப்படை விதியை கூட பூர்த்தி செய்யாத இந்த நிறுவனம் திட்ட பணியை கைப்பற்றியுள்ளது. இந்த நிறுவனம் கடந்த 2013ம் ஆண்டு முதல் 2018ம் ஆண்டு வரை பாஜவுக்கு கட்சி நிதியாக ரூ.6.46 கோடி வழங்கி இருக்கிறது. இதுபோல் 2017-18 நிதியாண்டில் ரூ.5.25 கோடி, 2015-16 நிதியாண்டில் ரூ.1 கோடி மற்றும் 2013-14 நிதியாண்டில் ரூ.21 லட்சம் கட்சி நிதியாக வழங்கி இருக்கிறது. இந்த நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவராக ராகு சந்திரா உள்ளார். முன்னாள் ஐஏஎஸ் அதிகாரியான இவர், தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் தலைவராக 2015ம் ஆண்டு முதல் 2016ம் ஆண்டு வரை பதவி வகித்துள்ளார்.

மேலும் ஜிஆர் இன்ப்ரா ஸ்டிரக்சர் ப்ராஜெக்ட் நிறுவனத்தின் துணை நிறுவனமான ஜிஆர் ஹைவேஸ் இன்வெஸ்ட்மென்ட் மேனேஜர் நிறுவனத்துக்கு கூடுதல் இயக்குனராகவும் இருந்தவர். இதுபோல் வெல்ஸ்புன் என்டர்பிரைஸ் நிறுவன இயக்குநராகவும் உள்ளார். அதானி குழுமமும் வெல்ஸ்புன் நிறுவனமும் இணைந்து அதானி வெல்ஸ்புன் துரப்பன நிறுவனம் என்ற பெயரில் எரிவாயு துரப்பன பணிகளில் ஈடுபட்டுள்ளன. இது தவிர ஜெ குமார் இன்ப்ரா புராஜெக்ட் நிறுவனம் மிச்சிகன் இன்ஜினியர்ஸ் நிறுவனத்துடன் இணைந்து வர்த்தகம் செய்து வருகிறது. மிச்சிகன் இன்ஜினியர்ஸ் நிறுவனம் வெல்ஸ்புன் என்டர்பிரைசில் 50.10 சதவீதம் பங்கினை கொண்டுள்ளது. ஜெ குமார் நிறுவனம் பாஜவுக்கு கட்சி நிதியாக ரூ.6.46 கோடி வழங்கியுள்ளது.

இது ஒருபுறம் இருக்க, ஜெ.குமார் இன்ப்ரா புராஜெக்ட் நிறுவனத்தை மும்பை மாநகராட்சி கடந்த 2016ம் ஆண்டு தடைப் பட்டியலில் வைத்திருந்தது. 2015ம் ஆண்டு நடந்த சாலை திட்ட ஊழல் விவகாரத்தை தொடர்ந்து இந்த முடிவை மும்பை மாநகராட்சி அப்போது எடுத்திருந்தது. கடந்த 2021ம் ஆண்டு மும்பையில் பாலம் ஒன்று இடிந்து விழுந்து நொறுங்கியது. இந்த பாலம் ஜெ குமார் நிறுவனத்தால் கட்டப்பட்டது. இந்த நிறுவனத்துக்கு திட்டத்தை வழங்கியதற்கு, பாஜ தலைமையிலான அப்போதைய மகாராஷ்டிர அரசை எதிர்க்கட்சியினர் கடுமையாக விமர்சனம் செய்திருந்தனர்.

---


### அடுத்த இதழில்

- **கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையின் தொடர்ச்சி**
- **பெரியார் இழி தொழிலை செய்யச் சொன்னாரா? அவதூறுகளுக்கு ஆதாரங்களுடன் ஆணித்தர மறுப்பு!**

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# வைக்கம் போராட்டம் : வெளிவராத செய்திகள்

*1) வைக்கத்தில் சூத்திர வகுப்புப் பெண்கள் கோயிலுக்குள் நுழைவதற்கு அதிகாரிகள் மறுத்ததாக 15.6.1924 சுதேசமித்திரன் ஏட்டில் வெளிவந்த செய்தி தெரிவிக்கிறது. கோவில் மதில்களுக்கு வெளியே உள்ள பொதுச் சாலைகளில் தீண்டப்படாதார் நடக்கக் கூடாது என்பதும், சாதி இந்துக்கள் என்கிற சூத்திரர் குறிப்பாக பெண்கள் கோயிலுக்குள் போகக் கூடாது என்பதும் இந்துமத ஆசாரம். இதையும் மீறினார் ஈ.வெ.ரா. நாகம்மை. இந்நிகழ்ச்சி பற்றிய பின்வரும் செய்தி இதை எண்பிக்கிறது. கொச்சி, ஜூன் 20 - வைக்கத்தில் கிளர்ச்சி தொடர்ந்து நடைபெறுகிறது. வைக்கம் கோயிலுக்கு உள்ளே சாதி இந்துப் பெண்களான திருமதி நாயக்கரும், மற்றுமுள்ள பெண்களும் நுழையக்கூடாது என தேவசம் போர்டு தடை செய்திருந்தது. அதையும் மீறி அவர்கள் நுழைந்து விட்டார்கள். இது பற்றி தேவஸ்வம்போர்டு ஊழியர் ஒருவர் நேரில் சத்தியாகிரக ஆசிரமத்திற்கு வந்து, அங்கிருந்த பொறுப்பாளர்களிடம் திருமதி நாயக்கர் கோவிலுக்குள் நுழைந்தது கடுமையான குற்றம் (Grievous Error) என்றும், சாதி இந்துக்கள் கோயிலுக்குள் நுழைய இன்னும் அனுமதிக்கப்படாத நிலையில் சாதி இந்துவான அவர் அப்படிச் செய்தது அடாதது என்றும் கூறி கண்டித்து விட்டுச் சென்றார் (The Hindu 21.6.1924)*




*2) அடுத்து, பிரஸ்தாப ரஸ்தாவில் தடுக்கப்பட்ட ஹிந்து சமூகத்தினர் பெரும்பாலும் தொண்டர்களாக இருக்கிறார்கள். தடுக்கப்பட்ட மேலண்டை வாசலில் ஸ்ரீமதிகளான கல்யாணியம்மாள், பார்வதியம்மாள், கரும்பியம்மாள், கருத்த குஞ்சம்மாள், ஸ்ரீமான் ராமசாமி நாயக்கரின் பந்துக்களான லட்சுமியம்மாள், மாரக்காயம்மாள் இவர்கள் நின்று சத்தியாகிரகம் செய்தது கல்மனதையும் கரையச் செய்ய வல்லது. மதுரை ஸ்ரீமான் நாராயண ஐயர் இங்கு அரிய வேலை செய்து கொண்டிருக்கிறார். ஸ்ரீமான்களான கோவிந்த சாணாரும் ராமசாமி நாயக்கரும் குடும்பம் சகிதம் தாமதித்து வருகிறார்கள் என்று விருதுநகர் ஸ்ரீமான் க. பெ. சங்கரலிங்க நாடார் எழுதுகிறார். (சுதேசமித்திரன் 25.7.1924. பக்கம் 8) என்ற செய்தியும் தோழர் வே.ஆ. அவர்களின் இந்நூலில் மட்டுமே காணக் கிடக்கும் செய்திகளாகும்.*

*மேலும் பெண் தொண்டர்கள் சாலையில் அமர்ந்து தேசிய கீதம் பாடிக்கொண்டும், இராட்டையில் நூற்றுக் கொண்டும் நிதி திரட்டினர் என்று கூறும் செய்திகளோடு, நாகம்மையார் கைதான செய்தியையும் இந்நூல் மட்டுமே பதிவு செய்துள்ளது.*

*3) ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் மனைவி மற்ற ஸ்த்ரீகளோடு பிரச்சார வேலையும் பண வசூலும் செய்து வருகிறார். சாது எம்.பி. நாயரின் மனைவியும் அவருடன் வேலை செய்கிறார். பாடிக் கொண்டும் ராட்டினம் சுற்றிக் கொண்டும் இந்த இரண்டு தொண்டர்களும் போக்குவரத்துக்கு தடையாக இருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு ஐந்து ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டனர். அபராதம் கொடுக்க மறுத்து கோர்ட் கலையும்வரை காவலில் இருந்தார். விசாரணைக்கு முந்தி எட்டு தினங்கள் ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார். .... (சுதேசமித்திரன் 5.8.1924) இந்த செய்தியும் குறிப்பாக நாகம்மையார் எட்டு நாட்கள் சிறை வைக்கப்பட்டு இருந்த செய்தியையும் இந்நூல் மட்டுமே கூறுகிறது. இந்நூலின் மூன்றாவது உட்தலைப்பாய் உள்ள கேரளத்தில் நிலவிய அன்றைய சமுதாய நிலை என்ற பகுதியின் இறுதிப் பகுதியில் உள்ள ..... அந்த நான்கு பக்கப் பெரும்பாட்டைகளில் நுழைவதற்குத் தடை போட்டு நான்கு பக்கங்களிலும் சுமார் 400 அடி, 450 அடி, 600 அடி, 1100 அடி தூரங்களில் தீண்டப்படாதவர்கள் இங்கே பிரவேசிக்கக் கூடாது என்று தனித்தனி அறிவிப்பு பலகைகளை அப்போது வைத்திருந்தனர். அன்று அந்த இடத்தை ஒட்டி உண்டியல் உண்டு. தீண்டப்படாதர் அந்த உண்டியலில் காணிக்கை போடலாம். அந்த எல்லைக்கு வெளியே நின்று வைக்கத்தப்பனை சேவிக்கலாம். மேல் சாதி இந்துக்களை வணங்க வேண்டும்; வணங்கலாம். இந்தத் தடைகளை உடைக்க வேண்டும் இதுவே வைக்கம் கிளர்ச்சியின் குறிக்கோள் என்பவையும் கூட புதிய செய்திகள்தான்.*

*புதிய செய்திகளைக் கூறுகிறது என்பது மட்டுமே நாம் கூற வந்த செய்தி அல்ல; இவ்வாறான செய்திகளை ஆவணக் காப்பகங்களில் இருந்து தேடி எடுத்து, நேரடியாய் களத்துக்கே போய் பார்வையிட்டு செய்திகளைச் சேகரித்து முழு செய்திகளையும் பதிய வேண்டும் என்ற ஆர்வமே பெரிதும் கருதிப் பார்க்க வேண்டிய ஒன்றாகும். இதுவே இந்நூல் ஆசிரியரின் தனித்துவ பண்புமாகும்.*

*இவ்வளவு பெரிய போராட்டத்தை, இதில் பெரியாரின் பெரும்பங்கை, அதிலும் அந்தப் போராட்டத்தில் இரண்டு முறை சிறைப்பட்டவரும், கடுங்காவல் தண்டனையின் காரணமாக கைதி உடையும் கால் விலங்கோடும் வேலைகளும் கொடுத்து கடுங்காவல் தண்டனை பெற்றவரும், அந்த வைக்கம் வெற்றி விழாவில் கலந்து கொண்டவருள் கேரளத்தவர் அல்லாதவர் அவர் மட்டுமே என்கிற சிறப்புகளைக் கொண்டவரான பெரியாரின் பங்களிப்பையே மறுதலித்து 100 ஆண்டு வரலாறு கொண்ட போராட்டத்தை இன்றளவும் கொச்சைப்படுத்திக் கொண்டிருக்கிற கேவலமான போக்கினைக் கடைபிடிக்கிற கயவர்களுக்கு ஆதாரப்பூர்வமான செய்திகளை வழங்க நமக்கு கிடைத்திருக்கிற அரிய ஆயுதங்களில் இதுவும் ஒன்றாகும்.*

*29.11.1925 அன்று, அதாவது பெரியார் காஞ்சிபுரம் காங்கிரசு மாகாண மாநாட்டில் தான் தொடர்ந்து மாநாடுதோறும் வலியுறுத்திவந்த வகுப்புரிமைத் தீர்மானம், முதல்நாள் தமிழர் மாநாடு கூடி தீர்மானித்திருந்தும், தேவைக்கு மேலான உறுப்பினர்களால் கையெழுத்திட்டு முன்மொழிந்தும், விவாதத்துக்குக் கூட எடுத்துக் கொள்ளவில்லையே என்ற பெரும் மனக்குமுறலோடு அம்மாநாட்டை விட்டு வெளியேறிய (23.11.1925) ஒரு வாரத்துக்குள், வைக்கம் சத்தியாகிரக ஆசிரமத்தின் செயலாளர் கேளப்பன் ஏற்பாட்டில் வைக்கத்தில் நடந்த வெற்றி கொண்டாட்டம் பெரியார் தலைமையில்தான் நடைபெற்றது.*

*போராட்டக் குழுவில் முன்னணி வகித்தவர்கள் ஒருவரான மன்னத்து பத்மநாபன் அவ்விழாவில் பேசுகையில் தமிழ் பிராமணர்களே பிரச்சனைக்கு காரணம்' என்று குறிப்பிட்டு பேசியுள்ளார்.*

*அவர் மேலும் பேசுகையில், 20 மாத சத்யாகிரகத்தில் பல ஆயிரம் வருஷங்களாய் ஏற்பட்ட கொடுமைகள் அழிந்து போய்விட்டன. திருவாங்கூர் இராஜ்யத்தில் உள்ள நாயர்கள் எல்லாம் சத்தியாகிரகத்துக்கு அனுகூலமாய் இருந்தார்கள். மலையாள நம்பூதிரிகள் அறியாதனத்தினாலும் குருட்டு நம்பிக்கையாலும் சத்தியாகிரகத்தை எதிர்த்து நின்ற போதிலும் அவர்களால் அவ்வளவு கெடுதிகள் ஏற்படவில்லை. ஆனால் தமிழ்நாட்டு பிராமணர்கள் தங்களுடைய சோம்பேறி மடத்துச் சாப்பாடு போய்விடுமே என்று பயந்து கொண்டு வேண்டுமென்றே பல அக்கிரமங்களையும் கொடுமைகளையும் சத்தியாகிரகத்துக்கு செய்து வந்தார்கள். வெட்டிச் சோற்றைத் தின்பதற்காக இங்கு வந்திருக்கும் ஊட்டுப்புரை தமிழ்ப்பிராமணர்கள்தான் கொடுமை செய்கிறார்கள். அந்த தமிழ்ப் பிராமணர்களைக் கேரளத்தை விட்டு தமிழ்நாட்டிற்கு ஓட்டி விட்டால் திருவாங்கூர் இராஜ்யத்தில் ஒரு கலகமும் இருக்காது என்று பேசினார் மன்னத்து பத்மநாபன். (வைக்கம் போராட்டம் - பழ.அதியமான். பக்.297).*

*அவர் குறிப்பிட்ட ஊட்டுப்புரை சோம்பேறித் தமிழ்ப் பிராமணர்களும், அவர்களது சூத்திர அடிவருடிகளும் இந்த ஆண்டிலாவது, வைக்கம் போராட்டத்தைப் பற்றி வெளிவரும் நூல்களை, அவற்றின் செய்திகளைப் படித்து தெளிந்து கொள்ளட்டும் என்பதே நமது விருப்பம்.*

***- கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் முன்னுரையில் இருந்து***

***நூல் குறிப்பு :***

***பெரியாரும் நூற்றாண்டு காணும் வைக்கம் கிளர்ச்சியும்***
***வெளியீடு : மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி***
***விலை : ரூ.80/-***
***தொடர்பு எண் : 86681 09047***

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : September 01, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran